பட்டுக்கோட்டை தொகுதி – மதுக்கூர் வடக்கு ஊராட்சியில் – நான்கு வழிச்சாலை சந்திப்பில் ரவுண்டானா –

# நெடுஞ்சாலை பயணியர் விடுதி - மூன்றாம் கட்ட புறவழிச்சாலை!

## சட்டப்பேரவையில் உறுப்பினரின் கேள்விகளுக்கு – அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜன.26-

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது பட்டுக்கோட்டை தொகுதி கழக உறுப்பினர் கா.அண்ணாதுரை, தமது தொகுதியில் ரவுண்டானா அமைத்தல், நெடுஞ்சாலை பயணியர் விடுதி, மூன்றாம் கட்ட புறவழிச்சாலை அமைத்தல் ஆகியன குறித்து எழுப்பிய வினாக்களுக்கு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



இது குறித்து சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கா.அண்ணாதுரை:** பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் வடக்கு ஊராட்சி, பெரமையர் கோவில் அருகில் உள்ள நான்கு வழிச்சாலை சந்திப்பில் ரவுண்டானா அமைக்க அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?

அமைச்சர் எ.வ.வேலு: சட்டமன்ற உறுப்பினர் கோரிய சாலை சந்திப்பானது கும்பகோணம், மன்னார்குடி, அதிராம்பட்டிணம் சாலை, பாப்பாநாடு, மதுக்கூர் -பெருகாவாழ்ந்தான் சாலை சந்திக்கின்ற ஒரு இடம் ஆகும். இது IRCயினுடைய விதிகளுக்குட்பட்டு, 30 மீட்டர் விட்டத்திற்கு ரவுண்டானா அமைக்க வேண்டும். ஆனால் அந்த இடத்திலே 23 மீட்டர் விட்டத்திற்குத்தான் ரவுண்டானா அமைக்க இடம் உள்ளது. எனவே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அவ்விடத்தில் சோதனை ஓட்டம் பார்த்து, ஆய்விற்கு பின்னால் ரவுண்டானா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்சமயம் அந்த மையத்திலே மையத்தடுப்புச்சுவர், வேகத் தடுப்புச்சுவர் அமைத்து உரிய சாலை பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனவே, வருங்காலங்களில் இதற்கான ஆய்வினை மேற்கொண்டு, சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**கா.அண்ணாதுரை:** பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி விதிகளுக்குட்படாத காரணதால், நேற்றைய தினம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் சிறிய அளவிலே ஒரு மாதிரி ரவுண்டானா மிக வேகமாக மின்னல் வேகத்திலே, அந்த ரவுண்டானாவை தற்காலிகமாக அமைத்துத் தந்திருக்கிறார்கள். பரீட்சார்த்த அடிப்படையில் அமைத்திருக்கிற அந்த ரவுண்டானா எதிர்காலத்திலே நிரந்தரமாக அமைவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும்.

இந்த இடத்திற்கு அருகாமையில்தான் மதுக்கூர் பேரூராட்சியினுடைய எல்லை தொடங்குகிறது. இங்கு ஒரு நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லாமல் அந்த இடம் முட்புதர் மண்டிய காடுபோல் காட்டியளிக்கிறது. மதுக்கூர் பேரூராட்சி எதிர்காலத்தில் ஒரு வட்டத்தினுடைய தலைநகராக உருவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், பழைய ஓட்டுக் கட்டடம் இருக்கக்கூடிய அந்த இடத்தில் ஒரு புதிய நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**அமைச்சர் எ.வ.வேலு:** பொதுவாக விபத்துகளைக் குறைப்பதற்காகதான் Junction improvementஐ செய்கின்றோம். இந்த அரசு பொறுப்பேற்றவுடனே அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, சாலை சந்திப்புகளை சீரமைப்பதற்கான பணிகளில் இந்த துறை ஈடுபட்டிருக்கிறது. சென்ற நிதியாண்டிலே 100 கோடி ரூபாய் செலவிலே ரவுண்டானாவுடன்கூடிய சாலை சந்திப்புகளை மேம்படுத்தியிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டும் தமிழ்நாட்டில் இருக்கின்ற, விபத்து பகுதிகளைக் கண்டறிந்து, சாலை சந்திப்புகளிலே ரவுண்டானா அமைப்பது என்பது IRC guide பின்பற்றி செய்வோம். Indian Roads Congress என்ற விதி களுக்குட்பட்டு பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அதனால்தான் சட்டமன்ற உறுப்பினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்தேன்.

அதனைத் தொடர்ந்து, நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் வடக்கு ஒன்றியத்திலே இருக்கின்ற ஆய்வு மாளிகையை சீர் செய்துதர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சென்ற ஆண்டே அதற்கு வேண்டிய முன்னெடுப்புப் பணிகளை நாங்கள் எடுத்தோம். மதுக்கூரில் உள்ள ஆய்வு மாளிகை 2011 ஆம் ஆண்டு கஜா புயலால் மிகவும் சேதம் அடைந்தது. அதனால், 2022 ஆம் ஆண்டில் அதனை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவந்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையானது புது ஆய்வு மாளிகை வேண்டும் என்பதுதான். ஏற்கெனவே இருக்கின்ற ஆய்வு மாளிகை renovation செய்து தற்போது பயன்பாட்டில் இருக்கிறது. இருப்பினும், புதிய ஆய்வு மாளிகை வேண்டுமென்ற அடிப்படையிலே தங்களுடைய கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பொதுவுடைமைச் சித்தாந்தம் கொண்ட பல சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, தங்கள் தொகுதிக்கு ஓர் ஆய்வு மாளிகை வேண்டும் அல்லது Guest house வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த நிதியாண்டிலே முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி எந்தெந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு ஆய்வு மாளிகை, Guest house, Circuit house இல்லையோ அவற்றையெல்லாம் கட்டுவதற்கு ஒரு முன்மொழிவை எற்பாடு செய்து, அடுத்த நிதி ஆண்டிலே கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறோம்.

**கா.அண்ணாதுரை:** பட்டுக்கோட்டை நகரைச் சுற்றி இரண்டு கட்ட புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் இருக்கிறது. மூன்றாம் கட்ட புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆலடிக்குமுளை கிராமத்திலிருந்து நயினார்குளம் கிராமம் வரை சுமார் 7.20 கி.மீ. வரை அமையவிருக்கும் இந்த சாலை பணியின் முதல் கட்ட நில எடுப்பிற்காக 30.60 கோடி ரூபாய் தேவைப்படுவதாக திட்ட அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்களிடம் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக இதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து வலியுறுத்தியிருக்கிறேன். தற்போது, பட்டுக்கோட்டையில் புதிதாக கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தலைமையில், இளந்தலைவர் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்கள்.

மூன்றாம் கட்ட புறவழிச் சாலை அமைந்தால்தான் இந்தப் பேருந்து நிலையம் முழுமையான பயன்பாட்டிற்கு வரும் என்கின்ற நிலைமை அங்கு இருக்கின்ற காரணத்தினால், மூன்றாம் கட்ட புறவழிச் சாலையை அமைப்பதற்கான முதல் கட்ட நிதியை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் எ.வ.வேலு:** ஒரு முறை, தமிழ்நாட்டை ஆட்சி செய்த அண்ணன் கலைஞர் அவர்கள் அது பட்டுக்கோட்டை அல்ல பாட்டுக்கோட்டை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு பகுத்தறிவு சிந்தனைகளை, சீர்திருத்த சிந்தனைகளை பாடல்களின்மூலமாக விதைத்தவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள். அந்தப் பட்டுக்கோட்டைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மூன்று கட்டமாக இந்தப் பணிகளை எடுத்து செய்கின்றோம்.

இன்னும் சொல்லப்போனால், நான்கு கட்டமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதில் முதல் கட்டமாக 21 கி.மீ. நீளத்திற்கு சுற்று வட்டச் சாலை அமைக்கும் பணி, நான்கு கட்டங்களாக பிரிக்கப்பட்டு இதிலே ஆலடிக்குமுளை முதல் அணைக்காடு வரை 7 கி.மீ. நீளத்திற்கு முதல் கட்டப் பணிகளும், இரண்டாம் கட்டப் பணிகளும் தற்போது முடிக்கப்பட்டிருக்கிறது. தற்போது மூன்றாம் கட்டப் பணிக்கு 7 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்புப் பணிகள் செய்வதற்கு 31 கோடி ரூபாய் தேவைப்படுவதால் அதற்கான கோப்புகளை நாங்கள் நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம்.

அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது. தொடர்ந்து, துறையின் சார்பாக நிதித் துறைக்கு அழுத்தம் தந்துகொண்டிருக்கிறோம். அது வந்தவுடனேயே நிலம் எடுக்கப்பட்டு, மூன்றாம் கட்டப் பணிகளை மேற்கொள்வோம். நான்காம் கட்டமாகவும் 7 கிலோ மீட்டர் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. நான்காம் கட்டப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் அடுத்த நிதியாண்டில் நிலஎடுப்பிற்கு வேண்டிய நிதியை ஒதுக்கித் தருவதற்கு திட்ட மதிப்பீட்டை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். நான்காம் கட்டப் பணிகளை அடுத்த நிதி யாண்டில் எடுத்துக்கொள்வோம். இந்த நிதியாண்டிலேயே மூன்றாம் கட்டப் பணிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரத்தில்

# ரூ.40கோடியில் அரசு மருத்துவமனை!

## கழகப் பொதுசெயலாளர் – அமைச்சர் துரைமுருகன் இன்று திறந்து வைக்கிறார்!

வேலூர், ஜன.26-

வேலூர் மாவட்டம் குடியாத்தம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி முகஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ரூ.40கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட குடியாத்தம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை திறப்பு விழா இன்று திங்கட் கிழமை மாலை 5மணிக்கு நடக்கிறது.



நீர்வளத்துறை அமைச்சர் கழக பொதுசெயலாளர் துரைமுருகன் அவர்கள், மருத்துவமனையைதிறந்து வைக்கிறார்.

நிகழ்ச்சியில்பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு, சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம் எல்ஏ, வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளு மன்றஉறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் மாநிலமகளிர்பிரசாரக்குழு செயலாளர் வி.அமலு விஜயன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

2026 ஆம் ஆண்டு குடியரசுத் தினத்தை முன்னிட்டு –

# 44 காவல்துறை அதிகாரிகள் - பணியாளர்களுக்கு பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன.26-

2026ம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு 44 காவல் துறை அதிகாரிகள்/ பணியாளர்களுக்கு குடியரசு தின பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணை வருமாறு:-

மெச்சத்தக்க நுண்ணறிவு மற்றும் மெச்சத்தக்க சிறப்பு செயலாக்க பிரிவில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் காவல்துறை அதிகாரிகள்/பணியாளர்களுக்கு 2026ம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் மெச்சத்தக்க நுண்ணறிவு மற்றும் மெச்சத்தக்க சிறப்பு செயலாக்கப் பணிப் பதக்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு, காவல் துறையில் மெச்சத்தக்க நுண்ணறிவு மற்றும் மெச்சத்தக்க சிறப்பு செயலாக்கப் பிரிவில் பணியாற்றிய 43 காவல்துறை அதிகாரிகள்/பணியாளர்கள் மற்றும் 1 தனிப் பிரிவு உதவியாளர், நுண்ணறிவுப் பிரிவு ஆகியோருக்கு "தமிழக முதலமைச்சரின் மெச்சத்தக்க நுண்ணறிவுப் பதக்கம் மற்றும் மெச்சத்தக்க சிறப்பு செயலாக்கப் பதக்கம்" வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா பத்து கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் – தலைவாசல் வட்டம் சதாசிவபுரத்தில் கால்பந்து விளையாடியபோது

# உயிரிழந்த கல்லூரி மாணவியின் குடும்பத்தினருக்கு ரூ. 3 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சேலம், ஜன.26-

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், சதாசிவபுரம் கிராமம், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி மாணவி கால்பந்து விளையாடியபோது உயிரிழந்தது தொடர்பாக, குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், சதாசிவபுரம் கிராமம், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் கணினி அறிவியல் முதலாமாண்டு பயின்று வந்த கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் ராயக்கோட்டையைச் சேர்ந்த, செல்வி.திவ்யதர்ஷினி (வயது 17) த/பெ. (லேட்) வடிவேல் என்பவர் 23.1.2026 அன்று பிற்பகல் சக மாணவியருடன் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தபோது எதிர்பாராதவிதமாக மயங்கி விழுந்து சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்த மாணவி செல்வி.திவ்யதர்ஷினியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்

# இரா.சிவஞானம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 26-

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம் (வயது 73) நேற்று (25.1.2026 - திங்கள்) மறைவுவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த இரா.சிவஞானம் சுமார் 54 ஆண்டு காலம் கழக பணியாற்றியவர். 19 வயதில் கழகத்தில் இணைத்து கொண்ட அவர், வாலாஜா தெற்கு ஒன்றியம் - நவ்லாக் கிராமத்தின் முதல் கிளைக் கழக செயலாளர், மாவட்டப் பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். இரண்டு முறை ஊராட்சி மன்ற தலைவராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

சங்கராபுரம் நரிக்குறவர் – ஆதிதிராவிடர் மக்கள் வாழ்கின்ற இடங்களில்

# பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்திடுக!

## சட்டப் பேரவையில் சங்கராபுரம் தா.உதயசூரியன் கோரிக்கை!

**சென்னை, ஜன. 26 -**

**சங்கராபுரம் நரிக்குறவர் - ஆதிதிராவிடர் மக்கள் வாழ்கின்ற இடங்களில் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்திடுக என சட்டப்பேரவையில் சங்கராபுரம் தா.உதயசூரியன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

**அவர் பேசியதாவது:-**



**தா.உதயசூரியன்:** சென்ற மாதம் முதலமைச்சர் அவர்கள் கள்ளக்குறிச்சிக்கு வருகை தந்து, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, சுமார் 25,000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றபோது, நில பட்டாக்கள், கல்வராயன் மலையில் வாழ்கின்ற மக்களுக்கும், அதேபோல வீட்டு மனை பட்டாக்களும், 10,000 நபர்களுக்கு மேல் வழங்கப்பட்டன. ஆகவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே பூட்டை, சங்கராபுரம் நரிக்குறவர், ஆதி திராவிடர் மக்கள் வாழ்கின்ற இடங்கள், பொய்குணம், கொசப்பாடி போன்ற கிராமங்களில், குன்று புறம்போக்கு என்று இருப்பதனால், கனிம வளத் துறையிலிருந்து, தடையில்லாச் சான்று வழங்கப்பட்ட பிறகுதான் பட்டா கொடுப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அந்தக் கருத்துரு இருக்கிறது. அமைச்சர் அவர்கள், கனிம வளத் துறையின் மூலமாக கருத்துருவை அனுப்பி, விரைவில் இந்த மாத இறுதிக்குள்ளாகவே இலவச வீட்டுமனைப் பட்டா அந்த மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன்:** உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிசீலிக்கும். பொதுவாக, நிறைய இடங்கள் பட்டா கொடுக்காமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. நாங்களும் முடிந்த அளவிற்கு, 97 G.O. பார்த்தீர்களென்றால், சென்னையைச் சுற்றி, முதலமைச்சர் அவர்களின் கருணையின் காரணமாகவும், முதலமைச்சர் அவர்களின் நல்ல எண்ணத்தின் காரணமாகவும்தான் சென்னையைச் சுற்றி இருப்பவர்களுக்கெல்லாம், இப்போது 97 G.O. மூலமாக ஏறத்தாழ 80,000 நபர்களுக்கு பட்டா வழங்கியிருக்கிறோம். நகராட்சி பகுதியில், belt areaல் குடி யிருப்பவர்களுக்கு, ஆண்டாண்டு காலமாக அவர்களுக்கு பட்டா கிடைக்காது. இப்போது, கொடுத்துள்ளோம். ஒவ்வொரு பகுதியாக பிரித்து எடுத்து, அதில் நீதி மன்றத்தின் தடை இருக்கிறது. மேய்க்கால் புறம்போக்கை பார்ப்போம் என்று சொன்னால், 5 ஏக்கரை நம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொன்னால், அதற்கு பதிலாக, இன்னொரு இடத்தில் 5 ஏக்கர் கொடுத்தபிறகுதான், அந்த 5 ஏக்கரை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்க கட்டடம் கட்டுவதற்கே நீதி மன்றம் அப்படி வழங்கியிருக்கிறது. எங்கே மேய்க்கால் நிலம் இருக்கிறது என்று தேடிப் பிடிப்பது அதில் ஒரு சிரமம் இருக்கிறது. ஆகவே இவையெல்லாம் கொள்கை ரீதியாக ஒரு முடிவு எடுத்து, எடுக்க வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். அதற்கும் விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன்.மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் 107அ வது வார்டில் பொதுமக்களுக்கு வீட்டு உபயோக பொருட்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் இரா. ராமலிங்கம், வட்டக் கழக செயலாளர் சிவா , கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கழக வெளியீட்டுக் குழு செயலாளர்

திருச்சி செல்வேந்திரன் புதல்வி

# எஸ்.ஜெயந்தி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 26-

கழக வெளியீட்டுக் குழுச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான திருச்சி செல்வேந்திரனின் புதல்வியும், செ.எழில்மாறன் செல்வேந்திரனின் சகோதரியுமான எஸ்.ஜெயந்தி அவர்கள் நேற்று (25.1.2026 - ஞாயிற்றுக் கிழமை) அதிகாலை 2 மணியளவில் உறையூர் காமாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, புதல்வியை இழந்து வாடும் திருச்சி செல்வேந்திரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.



எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வட்டக் கழகம் சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டு 250 பேருக்கு வேட்டி, சேலைகளை வட்டச் செயலாளர் ந.பாலு ஏற்பாட்டில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தல்படி பகுதி செயலாளர், நியமனக்குழு உறுப்பினர் சொ. வேலு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில், திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்டம் கயிலாசபுரத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமையில் கோலப்போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், 125 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.